# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2258/46 - 2021 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.12.17

*2258/46 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு கொத்மலை ரிவர்சைட் நீர் வழங்கல் திட்டத்தின், யடிபிஹன்கல நீர்க் களஞ்சிய தாங்கி மற்றும் பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதனை இக்கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, திசெம்பர் 13.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், உடபலாத பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1185, கலத கிராம அலுவலர் பிரிவில், யடிபிஹன்கல கிராமத்திலமைந்த, "மகாவலி காணி" எனும் காணியில் முழு அளவில் சுமார் 02 பர்ச்சஸ் அளவிலான கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : படிக்கட்டுகள் ;
கிழக்கு : மணல் வீதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மணல் வீதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :* திருமதி. டீ. ஜீ. விமலாவதி,
யடிபிஹன்கல,
கம்பளை.

EOG *12 - 0169*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, நாஉல வஹகோட்டை நீர் வழங்கல் திட்டத்தின், அமுக்க கட்டுப்பாட்டுத் தாங்கி இலக்கம் 03 ஐ நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதனை இக்கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, திசெம்பர் 13.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் ஈ428பீ, மெதபெத்த வடக்கு கிராம அலுவலர் பிரிவில், பம்பாகந்த கிராமத்திலமைந்த, "தெஹிகஹலந்த" எனும் காணியில் முழு அளவில் சுமார் 02 பர்ச்சஸ் அளவிலான கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் திரு. எம். ஜீ. ஜயரத்ன அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதி ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் திரு. எம். ஜீ. ஜயரத்ன அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : கால்வாய் (பட்டு எல).

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *01.* திரு. எம். ஜீ. ஜயரத்ன,
பம்பாகந்த,
மெதபெத்த வடக்கு,
வாசல கோட்டை.

EOG *12 - 0170*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேச நாணாயக்கார ஆகிய நான் குறித்த சபைக்கு, நாஉல வஹகோட்டை நீர் வழங்கல் திட்டத்தின், அமுக்க கட்டுப்பாட்டுத் தாங்கி இலக்கம் 01ஐ நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதனை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, திசெம்பர் 13.*

### *அட்டவணை*

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் ஈ427ஏ, சியம்பலாகஹவெல கிராம அலுவலர் பிரிவில், சியம்பலாகஹவெல கிராமத்திலமைந்த, "பம்பரகஹமுல தென்ன" எனும் காணியில் முழு அளவில் சுமார் 02 பர்ச்சஸ் அளவிலான கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

வடக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மணல் வீதி (இல்லகொல்ல வீதி) ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மணல் வீதி (இல்லகொல்ல வீதி).

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :* திரு. என். எம். டவ்லிவ். திலகரத்ன பண்டா,
இலக்கம் 13/A
சியம்பலாகஹவெல,
வாசல கோட்டை.

EOG *12 - 0171*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.